

கோவை மாநகர் மாவட்டம், இரத்தினபுரி பகுதி கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, கழக சாதனை விளக்க பொதுக்கூட்டம் இரத்தினபுரி பகுதி கழக பொறுப்பாளர், மாமன்ற முன்னாள் உறுப்பினர் கோவை லோகு தலைமையில் 47 வது வட்டக் கழக செயலாளர் என்.பி.செல்வமணி வரவேற்புரையில் மாநகராட்சி மத்திய மண்டலத்தலைவர் மீனா லோகு, 46 வது வட்டக் கழக செயலாளர் பி.ஆறுமுகம் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர், நகைச்சுவைத் தென்றல் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் சிறப்புரையாற்றினர். இதில் பகுதி கழக பொறுப்பாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ரமணி மாதவன் எம்.சி. தலைமை! நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலை!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் அரசுப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள்! குளம் சீரமைப்புப் பணி!

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்! மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஜூன். 23

மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிவுறுத்தலின்படி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி, இன்று (23.06.2025 திங்கட்கிழமை) காலை 8.30 மணி அளவில், சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டுக்கு உட்பட்ட கங்கா நகரில் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 40 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடம் திறப்பு விழாவும், மேட்டுக்குப்பம் கங்கை அம்மன் கோவில் குளம் சீரமைப்பு பணி நடைபெறுகிறது.

147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் தலைமை வகிக்கிறார்.

வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு துவக்கி வைக்கிறார்.

ஆகவே நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வி. முருகன் தலைமை! க.ஜெயராமன் - இரா.கருணாநிதி - வி.வேதா - சி.ஆனந்தி - வை.கௌதமன் முன்னிலை!

# பெரம்பூர் 46 வது வட்டத்தில் 500 பேருக்கு உணவு - நலத்திட்ட உதவிகள்!

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.வழங்குகிறார்! கலாநிதி வீராசாமி எம்.பி. - கன்னிகை ஜி.ஸ்டாலின் பங்கேற்பு!

சென்னை, ஜூன்.23

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 46 வது வட்ட தி.மு.க. செம்மொழி நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு 500 பேருக்கு அசைவ உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (23.6.2025 - திங்கள் கிழமை) பிற்பகல் 12 மணிக்கு அண்ணா நினைவு மன்றம் ஏ.பி.கல்யாணபுரம் மெயின் ரோட்டில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு 46 வது வட்டச் செயலாளர் வி.முருகன் தலைமை வகிக்கிறார்.

பெரம்பூர் தெற்கு பகுதிச் செயலாளர் க.ஜெயராமன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி, பகுதி துணைச் செயலாளர் வி.வேதா, சி.ஆனந்தி,எம்.சி., மாவட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை.கௌதமன், வெ.இன்பரசன், க.ஜெயராஜ், கதிரவன்மணி, பி.ஆனந்தி, டி.டி.மணிமாறன், ஜி.ஜெயகுமார், ச.ராஜன், ஆர்.சீதா, பி.கிருஷ்ணமூர்த்தி,இ.கர்ணா, கே..பிரசாத், எம்.ஜெயகிருஷ்ணன், இ.மணிகண்டன், ஜி.கணேசன் , எஸ்.கார்த்திக், எஸ்.சங்கீதா, ஜி..மோகன் ,டி.மகிமைராஜ், பி.ராதாகிருஷ்ணன், எஸ்.வேளங்கன்னி, ஏ.வனிதா எம்.அருண் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந் நிகழ்ச்சியில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ ,டாக்டர் கலாநிதி வீராசாமி,எம்.பி., கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு 500 பேருக்கு அசைவ உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

இதில் இரா.நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன , வி.தயாளன, ந.சர்ப ஜெயாதாஸ், ஏ.தமிழ்செல்வன், ப.மதிவணன், டி.கமலக்கண்ணன், க.அமுல், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி,க.பாபு, த.ஆறுமுகம், எஸ்.அருள், ஜி..மாரிமுத்து, கேபிள் கே..தினகரன், மு.சாகுல்அமீது, எஸ்.சாக்ரடீஸ், ஆர்.ஜோதிமணி, வி.எஸ்பிரபு, சி.சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### கோவில் பூசாரிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கி வரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### திருவாரூரில் தமிழ்நாடு கோவில் பூசாரிகள் சங்கம் தீர்மானம்

மன்னார்குடி,ஜூன் 23-

கோவில் பூசாரிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு கோவில் பூசாரிகள் நலச்சங்கம் சார்பில் மன்னார்குடியில் நேற்று முன்தினம் நன்றி அறிவிப்பு மாநாடு நடந்தது.

தமிழ்நாடு முதலமைச்சராக மு க ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை அறிவித்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறார். அந்த வகையில், கடந்த 20 வருடங்களாக மாத ஊதியம் இல்லாமல் பணியாற்றி வந்த 19 ஆயிரம் பூசாரிகளுக்கு தற்போது மாத ஊக்கத் தொகையாக ரூபாய் 1500 வழங்கப்பட்டு வருகிறது. கிராமப்புற கோயில்களுக்கு திருப்பணி நிதி ரூ 2.50 லட்சம் முயற்சி வழங்கப்படுகிறது. 60 வயதைக் கடந்த மூத்த பூசாரிகள் 5 ஆயிரம் பேருக்கு மாத ஓய்வூதியம் ரூபாய் 4 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

ஒரு கால பூஜை நடந்த கோயில்களின் எண்ணிக்கையை 12 ஆயிரத்திலிருந்து 19 ஆயிரம் ஆக விரிவு படுத்தி அந்தக் கோயில்களுக்கான மின் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டது.

முன்னாள் முதல்வர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கினார். அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி 12 ஆயிரம் பூசாரிகளுக்கு ஸ்கூட்டர் வாங்க 12 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத வகையில் பொறுப்பேற்ற நான்கு வருடத்திற்குள் குமார் 3500 திருக்கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தி சாதனை படுத்தியது உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ஆன்மீக தலத்திலும் திமுக அரசு முத்திரை பதித்து வருகிறது.

இந் நிலையில்,கோவில் பூசாரிகளின் நலன் கருதி பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு கோவில் பூசாரிகள் நலச்சங்கம் சார்பில் திருவாரூர் மாவட்ட நன்றி அறிவிப்பு மாநாடு மன்னார்குடியில் நேற்று நடந்தது. ராஜா கோபாலசாமி கோயில் அறங்காவலர் குழு தலைவர் கருடர் இளவரசன், மாவட்டச் செயலாளர் சேட்டு, மாவட்டத் துணைத் தலைவர் கலியமூர்த்தி, ஆலோசனை குழு தலைவர் ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டத் தலைவர் கோவிந்தராஜ் வரவேற்றார்.

மாநாட்டிற்கு தமிழ்நாடு கோயில் பூசாரிகள் நலச்சங்க மாநில தலைவர் வாசு தலைமை வகித்து நலவாரிய உறுப்பினர் படிவங்களை வழங்கியும், மூத்த பூசாரிகளின் சேவையை பாராட்டி அவர்களுக்கு சான்றிதர்களை வழங்கியும், தீர்மானங்களை விளக்கியும் பேசினார்.

மாநாட்டில், கிராமப்புற திருப்பணி கமிட்டியில் பூசாரிகளுக்கும் வாய்ப்பு வழங்க வேண்டும். நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு வருமானச் சான்று சமர்ப்பிக்க வேண்டியதில்லை என உத்தர விட வேண்டும்.

நலவாரியம் மூலம் பூசாரிகளுக்கு நிதி வழங்க உரிய நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல் உறுப்பினர் பதிவு கட்டணம் பெறுவதை ரத்து செய்ய வேண்டும். ஒரு கால பூஜை நடைபெறும் கோவில்களில் பணியாற்று பூசாரிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். ஓய்வூதியம் கோரி விண்ணப்பிக்கும் பூசாரிகளின் விண்ணப்பங்களை 30 நாட்களுக்குள் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு கால பூஜை நடைபெறும் கோவில் பூசாரி களுக்கு துறை ரீதியாக ஓய்வூதிய பெற நிதி ஒழிப்பு செய்ய வேண்டும். திருக்கோயில் ஆமணங்களிலும் வருவாய்த்துறை ஆவணங்களிலும் பசலி என்ற அந்நிய சொல்லை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பூசாரிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் மாவட்டம் நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. முடிவில் மாவட்ட மகளிர் அணி தலைவி மூர்த்தி தென்மொழி நன்றி கூறினார்.

## சென்னை வடக்கு மாவட்டம்

# பெரம்பூர் - இராயபுரம் - ஆர்.கே.நகர் தொகுதி BLA-2 பாகநிலை முகவர்கள் கூட்டம்!

# கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு!

### மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர், இராயபுரம், ஆர்.கே.நகர் தொகுதி பாகநிலை முகவர்கள் (BLA-2) கூட்டம் (24-06-2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணிக்கு, T.H. ரோடு தங்க மாளிகையில் நாடாளுமன்ற உறுப்பினர் Dr.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில - மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், பாகநிலை முகவர்கள் (BLA-2) கலந்து கொண்டு தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தெற்கு, கிழக்கு, பேரூர், கழக சார்பாக முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் கும்மிடிப்பூண்டி பஜார் வீதியில் மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வே. ஆனந்தகுமார் , நா.பரிமளம், இரா.அறிவழகன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆயிரம் நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள் உடன் டிஜெ.கோவிந்தராஜன், மு.பகலவன், ஜெ.மூர்த்தி, சி. எச். சேகர், கே.வி.ஜி.உமாமகேஷ்வரி, மு.கதிரவன், எம்.எல், ரவி, சுப்பிரமணி, பா.செ.குணசேகரன்,வெங்கடாசலபதி, , விக்னேஷ் உதயன், தமிழ் சாதிக், சகிலா அறிவழகன், மு.மணிபாலன், ஆ.சக்தியவேலு, நா. செல்வ சேகரன், மு.முரளிதரன், ஆ.ராஜா, ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்தகுமார் ஜி,அபிராமி குமரவேல், பி.முத்து மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பொதுமக்களின் 30 வருட கோரிக்கையான

# உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் துவக்கி வைத்தார்!

உளுந்தூர்பேட்டை, ஜூன்.23–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.06.2025 அன்று வெள்ளிக்கிழமை அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித்துறை சார்பில் 202526ஆம் கல்வி யாண்டு முதல் செயல்படும் வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஆகிய இடங்களில் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களின் 30 வருட கோரிக்கையான கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள், இதனை தொடர்ந்து உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சிறப்பு பிரிவு கலந்தாய்வில் தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு கல்லூரி சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கி நிறைந்து மனது நிகழ்ச்சி யில் மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடினார்கள்.

மேலும் பொது மக்களின் 30 வருட கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் திராவிட மாடல் நல்லாட்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று முன்தினம் புதிதாக தொடங்கி வைக்கப்பட்டுள்ள உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கை, முதலாம் கட்ட கலந்தாய்வு (முதல் சுற்று) 20.06.2025 இன்று சிறப்பு பிரிவு கலந்தாய்வும், 23.06.2025 அன்று தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடப்பிரிவுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 50 மதிப்பெண் மற்றும் அதற்கு மேலும் பெற்ற மாணவர்களுக்கும், 24.06.2025 அன்று பி.காம் மற்றும் பிபிஏ பாடப் பிரிவுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்த்த மற்ற பாடங்களில் கூடுதல் மதிப்பெண் 220 மற்றும் அதற்கு மேலும் பெற்ற மாணவர்களுக்கும், 25.06.2025 அன்று பி.எஸ்சி கணினி அறிவியல் பாடப்பிரிவிற்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்த்த மற்ற பாடங்களில் கூடுதல் மதிப்பெண் 220 மற்றும் அதற்கு மேலும் பெற்ற மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாணவர் சேர்க்கைக்கான முதலாம் கட்ட கலந்தாய்வு (இரண்டாம் சுற்று) 26.06.2025 அன்று தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடப்பிரிவுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 50 மதிப்பெண்களுக்கு கீழ் பெற்ற மாணவர்களுக்கும், 27.06.2025 அன்று பி.காம், பிபிஏ மற்றும் பி.எஸ்சி கணினி அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்த்த மற்ற பாடங்களில் கூடுதல் மதிப்பெண் 220க்கும் கீழ் பெற்ற மாணவர்களுக்கும் கலந்தாய்வு நடைபெறவுள்ளது. எனவே இதனை உயர்கல்வி கற்கும் மாணவ மாணவியர்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.

உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறப்பு பிரிவு கலந்தாய்வில் பி.எஸ்சி படிப்பில் சேர்வதற்கான சேர்க்கை ஆணைப் பெற்ற மாணவர் விக்னேஷ் தெரிவிக்கையில் எனது ஊருக்கு அருகிலேயே உளுந்தூர்பேட்டையில் அரசு கலைக் கல்லூரி தொடங்கி உயர் கல்வி பயிலும் வாய்ப்பை ஏற்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார், மேலும் உளுந்தூர் பேட்டையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி திறந்து இருப்பது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும், தமிழக முதல்வருக்கு இந்த நேரத்தில் எங்களுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் திருக்கோவிலூர் துணை ஆட்சியர் ஆனந்த் குமார் சிங், உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் கு.செல்வராஜ், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கா.கார்த்திகா, உளுந்தூர்பேட்டை நகர் மன்றத் தலைவர் கே.திருநாவுக்கரசு, நகர்மன்ற துணைத் தலைவர் ப.வைத்தியநாதன், உளுந்தூர் பேட்டை ஒன்றியக்குழு தலைவர் பி.ராஜவேல், ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் அலெக்சாண்டர், நகர கழக செயலாளர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு

# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் துறைமுகம், எழும்பூர் தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம், எழும்பூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம் இன்று (23.06.2025 திங்கள்) பகல் 1.00 மணியளவில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான ஆ.ராசா, எம்.பி அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

| நாள் | நேரம் | சட்டமன்ற தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 23.06.2025 திங்கள் | பகல் 1.00 மணி | துறைமுகம் தொகுதி மற்றும் எழும்பூர் தொகுதி | பெரியார் திடல் வேப்பேரி, சென்னை |

மேற்கண்ட பாகமுகவர்கள் (BLA2) கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம், எழும்பூர் ஆகிய இரண்டு தொகுதிகளுக்குட்பட்ட இந்நாள் / முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாகமுகவர்கள் (BLA2) தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பி.கே.சேகர்பாபு**

அமைச்சர் – மாவட்ட செயலாளர்

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி தேனி வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசு சாதனை விளக்க பொதுக்கூட்டம் தாடிசேரி கலைஞர் திடலில் தேனி வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் முருக ஜெகதீசன். தலைமையில் நடைபெற்றது. தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி முன்னிலை வைத்தார் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி சிறப்புரை ஆற்றினார். வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான். ஒன்றிய துணை அமைப்பாளர்கள் அருள் வாசகன். காளிராஜ். ராஜா. சரவணன், பாண்டியராஜ். ஆகியோர் கலந்து கொண்டனர்